OS.No. 54/2015

Dated : 23.01.2024

Time: 12.55 pm to 01.10 p.m

D.W- 1 சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி

14) மேற்படி தாவா சொத்தினை குறித்து யார் யார் இடையே வாய்மொழி பாகம் நடந்தது என குறிப்பிட்டு என் வழக்கில் நான் சொல்லவில்லை. மேலும் அதில் துரைசாமிக்கும், வாதிக்கும், அய்யம்பெருமாளுக்கு எவ்வளவு பாகம், எந்த சர்வே எண்., எந்த விஸ்தீரணத்தில் கொடுக்கப்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி துரைசாமிக்கு எந்த மின் இணைப்பு எண். 137, வாதி சான்றாவணம் 10, 11 ன் கீழ் குறிப்பிட்ட நிலையில் அது குறித்து உயில் ஆவணமான பிவாசாஆ.16 ல் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மேலும் அவை பொது சொத்து என்பதால் தான் அதை உயிலில் காண்பிக்கவில்லை என்றால் அது தவறு.

15) அதே போல் மின் இணைப்பு எண் 163, 3 ஹெச் பி மின் மோட்டார் ஆகியவற்றை முழுமையாக மேற்படி உயிலில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 பட்டாவில் உள்ள அதில் கண்டுள்ள முழு விஸ்தீரணங்களையும் பிவாசாஆ.16 ல் காண்பிக்கபடாமல் பாதி சொத்து மட்டும் தான் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பிவாசாஆ.1, 2 கண்டுள்ள சொத்துககள் துரைசாமிக்கு பாத்தியப்பட்டதாக கண்டுள்ள நிலையில் அந்த முழு சொத்தை பிவாசாஆ.16 ல் காண்பிக்கவில்லை. மேலும் பிவாசாஆ.6 ல் கண்டுள்ள சொத்து குறித்து துரைசாமி எதுவும், யாருக்கும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

16) மேற்படி நான் முன்நிறுத்தியுள்ள வருவாய் ஆவணங்கள் துரைசாமி மற்றும் மற்றவர்கள் கூட்டு பாகத்தில் உள்ள நிலையில் அவை துரைசாமிக்கு மட்டுமே முழுமையாக பாத்தியப்பட்டதாக பிவாசாஆ.16 ல் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்துக்கள் பாகம் பிரியாத சொத்துக்கள் என்பதால் துரைசாமிக்கு வாரிசுகள் இல்லாத காரணத்தினால் அவருடைய சொத்தை அபகரிக்கம் நோக்கில் வாதிக்கு தெரியாமல் மோசடியாக பிவாசாஆ.16 உயிலை நாங்கள்

ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் அது தவறு. மேலும் சில சொத்துக்களில் பாகம் உண்டு , சில சொத்துக்களில் பாகம் இல்லை என நாங்கள் மறுத்து கூறுவது தவறு என்றால் சரியல்ல. குடும்பத்தின் மூத்தவர் என்பதால் துரைசாமியின் பெயரில் ஆவணங்கள் வந்தது என்றும் ஆனால் அவை அணைத்தும் அவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது அல்ல என்றும் அவை கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் அது தவறு.

17) பிவாசாஆ.16 மோசடியாக ஏற்படுத்திக்கொண்டு வாதிக்கு பாகம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு. என் கணவரை சாட்சியாக அழைத்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் சாட்சியாக அவரை முன்நிறுத்தவில்லை என்றால் அது தவறு. வாதி கோரியவாறு பாகம் கிடைக்கத்தக்கது என்றும் எனவே செலவு தொகையுடன் தீர்ப்பானை பகர வேண்டும். அசல் வழக்கு 134/2004 வழக்கை காளிமுத்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/- K.Ananthan

**Subordinate Judge,**

**Attur.**